# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 85/மா/2017

ஆணை எண்.174/2017

நாள் : 29/06/2017

திரு ச. முத்துக்குமார், தலைவர்,
அம்மன்– ஆண்டாள் நகர் நலச் சங்கம்,
கே.கே. நகர் (மேற்கு),
சென்னை – 600 078. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் – 11,
சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, கே.கே. நகர் மேற்கு, எண்.4/1, அம்மன்–ஆண்டாள் நகர் நலச் சங்கத் தலைவர் திரு ச. முத்துக்குமார் அவர்களது 20.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.04.2017 அன்று பெறப்பட்டு 85/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீடு சம்பந்தமாக மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் அம்மன்–ஆண்டாள் நகர் நலச் சங்க உறுப்பினர்களின் வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

<u>ஆணை</u>

சென்னை மாநகராட்சி, கே.கே. நகர் மேற்கு, எண்.4/1, அம்மன்–ஆண்டாள் நகர் நலச் சங்கத் தலைவர் திரு ச. முத்துக்குமார் என்பவர் தங்கள் பகுதியில் உள்ள புல எண்.65–ல் கட்டப்பட்டுள்ள மதகு பகுதி (மழைநீர் மதகு வழியாக அடையாறு ஆற்றினை சென்றடையும்) ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி உள்ளதென்றும், அதனால் சென்ற ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின்போது குடியிருப்புக்குள் நீர் புகுந்து ஒரு வாரமாகியும் வெள்ளநீர் வடியவில்லை எனத் தெரிவித்து, அவ்வாக்கிரமிப்பினை அகற்றக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மேலும், மதகுப் பகுதிக்கு முன்பாகவே நிறுத்தப்பட்டுள்ள மழைநீர் வடிகால் வாய்க்காலினை மதகு வரை நீட்டிக்கவும் கோரியிருந்தார்.

2. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக சம்பந்தப்பட்ட மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. சென்னை மாநகராட்சி தலைமையத்தில் இயங்கிவரும் மழைநீர் வடிகால் துறையின் மூலம் மழைநீர் வடிகால்வாய் கட்டப்பட்டு வருகிறது என்றும் அக்கால்வாய் ஜெய்பாலாஜி நகர், அமிர்த வித்யாலயா பள்ளி அருகில் அடையாறு கால்வாய் இணைப்புப் பகுதியில் சுமார் 20 மீட்டர் நீளத்திற்கு முன்பாக பழைய மழைநீர் வடிகால்வாய் பகுதியில் இணைக்கப்பட்டுள்ளதென்று தெரிவித்துள்ளார். புதிய மழைநீர் வடிகால்வாய் கட்டி அடையாறு கால்வாயை இணைக்க மழைநீர் வடிகால் துறை ஏற்றுக் கொண்டுள்ளது என்றும், அத்துறை மூலம் மழைநீர் வடிகால்வாய் கட்டப்படும் என மண்டல அலுவலர் உறுதி அளித்துள்ளார்.

3. 27.06.2017 அன்று நடைபெற்ற விசாரணைக்கு அம்மன்–ஆண்டாள் நகர் நலச் சங்க உறுப்பினர்கள் திருவாளர்கள் S.வெங்கடேசன், சுதர்சன், Ms. வனிதா மற்றும் Ms. அம்பிகா வருகை தந்து வாக்குமூலம் அளித்தனர். விசாரணையின்போது மதகுப் பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லையென்றும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டால்தான் கடந்த வெள்ளப்பெருக்கின்போது ஏற்பட்ட நிலைமை இக்குடியிருப்புவாசிகளுக்கு ஏற்படாது எனவும் தெரிவித்தனர்.

4. கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் குறித்து விசாரணையின்போது விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. வெள்ளநீர் வடிந்து செல்லும் மதகுப் பகுதியில் ஆக்கிரமிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை விசாரணையின்போது சங்க உறுப்பினர்கள் உறுதி செய்தனர். ஆக்கிரமிப்பினை அகற்றாமல் வெள்ளம் சூழ்ந்து பொதுமக்கள் அவதிப்படும் போது அன்றைய பொழுதிற்கு ஏதாவது உதவி செய்வது நிரந்தரத் தீர்வாக அமையாது. வெள்ளநீர் வடிந்து செல்லும் மதகுப்பகுதி ஆக்கிரமிப்புகள் இல்லாமல் இருப்பதை மாநகராட்சி உறுதி செய்ய வேண்டும். மதகுப் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் புதியகால்வாய் அமைப்பதனால் எந்தவிதப் பயனும் ஏற்படாது. எனவே, சென்னை மாநகராட்சி 11–வது மண்டல அலுவலரும் மதகுப்பகுதியில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்பினை அகற்ற உறுதியான நடவடிக்கையினை மேற்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. இதற்காக பிறதுறைகளின் கூட்டு முயற்சி தேவைப்பட்டால், அத்துறைகளை கலந்தாலோசித்து மழைகாலத்திற்கு முன்பே சம்பந்தப்பட்ட ஆக்கிரமிப்பினை அகற்றி இறுதி அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்க மண்டல அலுவலர் அறிவுறுத்தப் படுகிறார்.

2017– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 29–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 5/7/17

4.7.17

4/7/17

பெறுநர்

1. திரு. ச. முத்துக்குமார்,
எண்.4/1, அம்மன்–ஆண்டாள் நகர்,
கே. கே. நகர் (மேற்கு),
சென்னை – 600 078.

2. மண்டல அலுவலர்,
11–வது மண்டலம்,
சென்னை மாநகராட்சி,
எண். 33, ஆற்காடு சாலை, வளசரவாக்கம்,
சென்னை – 600 087.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்